# பத்மனாபபுரம் நகராட்சி

## மே 2021 –ம் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டப் பொருட்கள் விபரம் .

1)இந்நகராட்சியில் தற்போது 3634 எண்ணம் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. புதிய வீட்டுக்குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு 2021–2022 ஆம் ஆண்டுக்கு சாலை சீரமைப்புக் கட்டணம் ,மேற்பார்வைக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவைகளை கீழ்க்கண்ட விபரப்படி 5 சதவீதம் உயர்த்தி மதிப்பீடு தயார் செய்ய அரசாணை எண் 197 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.

## WATER SUPPLY HOUSE SERVICE CONNECTION 2021-2022

| S.No | Length | Road restoration | | | Domestic Deposit | Supervising charges | | | Domestic - Total amt |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2020-21 | 5% increase | 2021-22 | | 2020-21 | 5% increase | 2021-22 | 2021-22 |
| 1 | 2 | 3 | 4 | 5=3+4 | 6 | 7 | 8 | 9=7+8 | 10=5+6+9 |
| **CC ROAD** | | | | | | | | | |
| 1 | 0-15m | 7695 | 385 | **8080** | 5000 | 4097 | 205 | **4302** | **17382** |
| 2 | 0-30m | 14870 | 744 | **15614** | 5000 | 6760 | 338 | **7098** | **27712** |
| 3 | 0-45m | 22045 | 1102 | **23147** | 5000 | 10301 | 515 | **10816** | **38963** |
| 4 | 0-75m | 36394 | 1820 | **38214** | 5000 | 15888 | 794 | **16682** | **59896** |
| 5 | 0-90m | 43569 | 2178 | **45747** | 5000 | 18814 | 941 | **19755** | **70502** |
| **BT Road** | | | | | | | | | |
| 1 | 0-15m | 7474 | 374 | **7848** | 5000 | 4009 | 200 | **4209** | **17057** |
| 2 | 0-30m | 14427 | 721 | **15148** | 5000 | 6584 | 329 | **6913** | **27062** |
| 3 | 0-45m | 21380 | 1069 | **22449** | 5000 | 10035 | 502 | **10537** | **37986** |
| 4 | 0-75m | 35286 | 1764 | **37050** | 5000 | 15444 | 772 | **16216** | **58267** |
| 5 | 0-90m | 42239 | 2112 | **44351** | 5000 | 18282 | 914 | **19196** | **68547** |

| S.No | Length | Road restoration | | | NON-Domestic Deposit | Supervising charges | | | NON-Domestic - Total amt |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2020-21 | 5% increase | 2021-22 | | 2020-21 | 5% increase | 2021-22 | 2021-22 |
| 1 | 2 | 3 | 4 | 5=3+4 | 6 | 7 | 8 | 9=7+8 | 10=5+6+9 |
| **CC ROAD** | | | | | | | | | |
| 1 | 0-15m | 7695 | 385 | **8080** | 10000 | 4097 | 205 | **4302** | **22382** |
| 2 | 0-30m | 14870 | 744 | **15614** | 10000 | 6760 | 338 | **7098** | **32712** |
| 3 | 0-45m | 22045 | 1102 | **23147** | 10000 | 10301 | 515 | **10816** | **43963** |
| 4 | 0-75m | 36394 | 1820 | **38214** | 10000 | 15888 | 794 | **16682** | **64896** |
| 5 | 0-90m | 43569 | 2178 | **45747** | 10000 | 18814 | 941 | **19755** | **75502** |
| **BT Road** | | | | | | | | | |
| 1 | 0-15m | 7474 | 374 | **7848** | 10000 | 4009 | 200 | **4209** | **22057** |
| 2 | 0-30m | 14427 | 721 | **15148** | 10000 | 6584 | 329 | **6913** | **32062** |
| 3 | 0-45m | 21380 | 1069 | **22449** | 10000 | 10035 | 502 | **10537** | **42986** |
| 4 | 0-75m | 35286 | 1764 | **37050** | 10000 | 15444 | 772 | **16216** | **63266** |
| 5 | 0-90m | 42239 | 2112 | **44351** | 10000 | 18282 | 914 | **19196** | **73547** |

மேற்கண்ட கட்டணம் 01.04.2021 முதல் 31.03.2022 வரை புதிய குடிநீர் இணைப்பு வழங்க அமல்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு—</u>

வீட்டு உபயோகம் அல்லாத குடிநீர் இணைப்பிற்கு வைப்புத் தொகை ரூ.10000/— செலுத்த மன்ற அனுமதி வழங்கலாம்.

(நக.எண் 1926/2017/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண். 1779</u>

அனுமதிக்கப்படுகிறது

2) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 20452/2020/3. நாள். 31.03.2021 -ன் படி இந்நகராட்சிக்கு 15- வது மத்திய நிதிக்குழு (15th CFC ) இரண்டாம் கட்ட மானிய நிதி ((**Tied Grant 2nd Installment of Ted grants released to million Plus Cities and Non – Million Plus Cities 2020–21**) -ன் கீழ் குடிநீர் திட்டப்பணிகள் (மழைநீர் சேகரிப்பு மற்றும் மறு சுழற்சி உட்பட ) மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.2917541/- இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண் 20452/2020/3. நாள். 21.04.2021 -ன் தெரிவிக்கப்பட்டதன் படி இந்நகராட்சியில் இரண்டாம் கட்ட மானிய நிதியின் கீழ்குடிநீர் திட்டப்பணிகள் (மழைநீர் சேகரிப்பு மற்றும் மறு சுழற்சி உட்பட ) மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள கீக்காணும் விபரப்படி பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| Sl.No | Name of work | Estimate Amount (In lakhs) |
| --- | --- | --- |
| 1 | Construction of Segregation and storage shed for MCC at Compost yard in Padmanabhapuram Municipality | **16.00** |

| | | |
|---|---|---|
| 2 | Construction of Retaining wall reach -II at Marunthu kotagai near MCC shed in Padmanabhapuram Municipality | **4.60** |
| 3 | Construction of Segregation shed at Market near Onsite Compost shed in Padmanabhapuram Municipality | **5.20** |
| 4 | Supply and delivery of Baling machine for RRC at Compost yard in Padmanabhapuram Municipality | **1.50** |
| 5 | Maintenance work of OHT at padmanabhapuram, Puliyoorkurichy and Govt. Hospital in Padmanabhapuram Municipality. | **2.00** |
| | **TOTAL** | **29.30** |

மேற்படி 15 வது மத்திய நிதிக்குழுவின் இரண்டாம் கட்ட நிதியாக இந்நகராட்சிக்கு ரூ.2917541/- விடுவிக்கப்பட்ட தொகையில் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.2930000/- ஆகும். மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதியும் , அனுமதித்த தொகை போக மீதமுள்ள தொகை ரூ.12549/- னை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அதன்படி மேற்காணும் பணிகளில் வரிசை எண் 1-ல்காணும் திடக்கழிவு மேலாண்மை பணி (மதிப்பீடு ரூ.16.00 இலட்சம்) மேற்கொள்ளும் பொருட்டு மண்டல செயற்பொறியாளர் , திருநெல்வேலி அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெறவும் மேலும் வரிசை எண் 2 முதல் 5 வரையிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு- மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண். 0513 /2021/இ1,**

**<u>மன்றத் தீர்மானம் எண். 1780</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

3) இந்நகராட்சிப் பகுதிகளில் கொரோனா தொற்று 2-ம் அலை தடுப்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள அத்தியாவசிய உபகரணங்கள் கிருமி நாசினிகள் மற்றும் கொரோனா சம்பந்தப்பட்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.9691/ஜெ2/2021 நாள் 11/05/2021-ன் படி ரூ.30,00,000/- வரப்பெற்றுள்ளது.

மேற்படி தொகையினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறையில் தெரிவித்துள்ளபடி கொரோனா நோய் தொற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏற்படும் செலவினங்களுக்கு மற்றும் கொரோனா நோய் தொற்று முதல் அலையில் கொரோனா சம்பந்தமான செலவினங்கள் பொது நிதியில் இருந்து செலவு செய்யப்பட்டிருப்பின் அந்த செலவினங்களையும் தற்போது வரப்பெற்றுள்ள ரூ.30,00,000/- தொகையில் ஈடு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.500/2021/அ2)

<u>**மன்றத் தீர்மானம் எண். 1781**</u>

அனுமதிக்கப்படுகிறது.

4)இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா தொற்று இரண்டாம் அலை பரவுதலை தடுக்கும் பொருட்டு ஆணையர் அறிவுரையின் படி பிரிவு 15–ன் கீழ் கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய 17.05.2021–ல் விலைப்புள்ளி கோரப்பட்டு 21.05.2021 வரை அதற்கான விலைப்புள்ளிகள் பெறப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் விபரம் | அமிர்தா அசோசியேட்ஸ் | | ஸ்டீவ்வின் அசோசியேட்ஸ் | | திருப்பூர் அக்ரோ இஞ்சினியரிங் கோ–ஆப் சென்டர் | | புலியூர்சாலை லேபர் கான்ட்ராக்ட் கோ–ஆப் சொசைட்டி லிட் | | சாஸ்தா ஹெல்த் கேர், நாகர்கோவில் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ | பை | ரூ | பை | ரூ | பை | ரூ | பை | ரூ | பை |
| 1 | பிளிச்சிங் பவுடர் | 53 | 10 | 63 | 00 | 66 | 60 | 64 | 90 | – | – |
| 2 | நீற்றிய சுண்ணாம்பு | 10 | 00 | 12 | 00 | 12 | 50 | 13 | 12 | – | – |
| 3 | சோடியம் ஹைப்போ குளோரைடு | 32 | 45 | 37 | 00 | 41 | 00 | 48 | 38 | – | – |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | லைசால் | 138 | 06 | 158 | 00 | 170 | 00 | 188 | 80 | – | – |
| 5 | 3 Ply மாஸ்க் | 3 | 80 | 8 | 90 | 8 | 70 | 9 | 52 | – | – |
| 6 | PPE Kit முகக்கவசத்துடன் | 290 | 00 | 865 | 00 | 890 | 00 | 945 | 00 | – | – |
| 7 | கையுறை Disposable (தரம் வாரியாக) | 15 | 81 | 17 | 50 | 17 | 90 | 18 | 64 | 9 | 60 |
| 8 | சானிடைசர் (100 மி.லி) | 143 | 96 | 235 | 00 | 250 | 00 | 206 | 50 | 48 | 00 |
| 9 | சானிடைசர் (500 மி.லி) | 283 | 20 | 370 | 00 | 330 | 00 | 295 | 00 | 225 | 00 |
| 10 | சானிடைசர் (5 லிட்டர் கேன்) | – | – | – | – | – | – | – | – | 1770 | 00 |
| 11 | பினாயில் (கருப்பு) | – | – | – | – | – | – | – | – | – | – |
| 12 | பினாயில் (வெள்ளை) | 38 | 94 | – | – | 50 | 00 | 49 | 50 | – | – |
| 13 | தெர்மல் ஸ்கேனர் | – | – | – | – | – | – | – | – | 1900 | 00 |
| 14 | பல்ஸ் ஆக்சி மீட்டர் | – | – | – | – | – | – | – | – | 1450 | 00 |
| 15 | கையுறை (Reusable) | 141 | 60 | 90 | 00 | 90 | 00 | 84 | 00 | – | – |
| 16 | சர்ஜிகல் மாஸ்க் 3 ply with a layer of melt blown non woven fabric | 4 | 46 | – | – | – | – | – | – | – | – |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1,2,3,4,5, 6,12 மற்றும் 16 ஆகியவற்றிற்கு அமிர்தா அசோசியேட்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைந்த விலை விகிதத்தில் உள்ளது.

வரிசை எண் 7,8,9,10,11 மற்றும் 12 சாஸ்தா ஹெல்த் கேர் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது.

வரிசை எண் 15–க்கு புலியூர்சாலை லேபர் கான்ட்ராக்ட் கோ–ஆப் சொசைட்டி லிட் மட்டும் ரூ. 84 என்ற விலை விகிதம் நிர்ணயம் செய்து விலைப்புள்ளி ஒப்படைத்துள்ளது.(விலைப்புள்ளியில் கோரப்படாதது)

வரிசை எண் 11–க்கு எந்த நிறுவனமும் விலைப்புள்ளி ஒப்படைக்கவில்லை.

மேற்படி குறைந்த விலைப்புள்ளி ஒப்படைக்கப்பட்டுள்ள அமிர்தா அசோசியேட்ஸ், தாழக்குடி மற்றும் சாஸ்தா ஹெல்த் கேர், செட்டிக்குளம் நிறுவனங்களுக்கு பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

1. அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

மேற்படி செலவினங்களை SDRF நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலா

## <u>மன்றத் தீர்மானம் எண்.1782</u>

அனுமதிக்கப்படுகிறது.

**5)** இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து **2016–2017–**ஆம் நிதியாண்டில் வார்டு எண்.**9** வாணியன் விளை தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு நகராட்சி அலுவலக வேலை உத்திரவு ந.க.எண்.இ**1/5231/2015**, நாள் **17/08/2016–**ன் படி ஒப்பந்ததாரர் திரு. ஜேம்ஸ் என்பவருக்கு பணியினை மேற்கொண்டு உரிய முறைப்படி கேட்பினை சமா்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதன்படி அன்னாரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கேட்பு சமா்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் இறந்து விட்டபடியாலும், பணிகளுக்கான பட்டியல் தொகையினை வழங்க கோரி ஒப்பந்ததாரர் திரு. ஜேம்ஸ் (லேட்) என்பவரது வாரிசுதாரரான மனைவி திருமதி. சுபலா ஜெயந்தி என்பவர் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் WP(MD) No .19601/2020-ன் படி வழக்கு தொடரப்பட்டு தீர்ப்புரை பெற்ற நிலையில் நீதி மன்ற அவமதிப்பு ஏற்படாமல் இருக்கும் நிலையில் மேற்படி தொகை ரூ.**5,60,000/–** பொது நிதியிலிருந்து வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.1783</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**6)**இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறையின்படி **59** துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண்.**1655**, நாள் **30/06/2020–**ன் படி Southern Solid Waste Management Mulagumoodu என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு அதன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் மேற்படி பணி உத்திரவின் படி **30/06/2021** ஆம் தேதியுடன் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட ஒரு ஆண்டு காலம் முடிவு பெறுகிறது. அதனைத் தொடர்ந்து தேர்தல் MCC மற்றும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று (கோவிட்–**19**) தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டதால் பொது சுகாதாரம் பணியின் அத்தியாவசியம் கருதி Southern Solid Waste Management Mulagumoodu என்ற நிறுவனத்திற்கு ஜீலை **2021–**ம் மாதத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அதே ஊதிய நிர்ணய அடிப்படையில் ஒப்பந்த அனுபவத்தை **01** மாதம் நீட்டித்து வழங்க ஆணையர் மற்றும் தனி அலுவலர் மூலம் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே பொது சுகாதாரப் பணிகள் அத்தியாவசியம் கருதி ஜீலை 2021–ம் மாதத்திற்கு ஒப்பந்த அனுபவம் நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:– பொது சுகாதார அத்தியாவசியம் கருதி ஜீலை 2021–ம் மாத காலத்திற்கு ஒப்பந்த அனுபவத்தை நீட்டித்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 370/2020/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1784</u>**

அனுமதிக்கப்படுகிறது.

7) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளுக்கும் 2021-2022 ஆம் ஆண்டு வருடாந்திர தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு தெருவிளக்கு உபகரணங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Description of the work | Nos |
|---|---|---|
| 1. | 4'18W Crystal Glass LED Tube Light fitting<br>(Havells-Equivalent) | 1000.00 |
| 2. | 40W Starter | 1000.00 |
| 3. | 40W Choke (Philips /Crompton/Equivalent) | 300.00 |
| 4. | 1-18/ VIR wire (14/0.31sqmm) | 7.00 |
| 5. | 3/20 VIR Wire (36/0.32.5sqmm) | 2.00 |
| 6. | 20W LED Bulb | 50.00 |
| 7. | 30W LED Street Light Fittings | 50.00 |
| 8. | Insulation Tap | 50.00 |
| 9. | 100W LED Foccus | 20.00 |
| 10. | Pole Clamp | 25.00 |
| 11. | 6" Bolt | 50.00 |
| 12. | 24 Hours Analog Timer Switch with Shortest witching Time 30 Minutes | 40.00 |
| 13. | 30A Relay Unit | 40.00 |
| 14. | 30A Fuse Unit | 25.00 |

மேற்கண்ட தெருவிளக்கு உபகரணங்களில் வ.எண். 2,3,4,5,6,7,9,10,11 மற்றும் 13 ஆகிய இனங்களுக்கு விலை நிரக்கு பட்டியலில் (

Schedul e of ) விலை விகிதம் இல்லாத காரணத்தால் விலை விகிதம் அறிய 12/05/2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது.

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள ONS , என்ற நிறுவனதாரரின் குறைந்த விலை விகிதத்தை ஏற்கவும், அதனடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி மேற்கண்ட விலை விகிதத்தில் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 560000/-க்கு மன்ற அனுமதியும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 632/2021/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1785</u>

அனுமதிக்கப்படுகிறது.

8)இந்நகராட்சியில் 2020–2021–ம் ஆண்டு தணிக்கை நடைபெற இருப்பதால் வருவாய் மற்றும் மூலதனநிதி (ம) குடிநீர் வடிகால் நிதி கணக்குகள் தயார் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி கணக்குகள் தயார் செய்ய திரு. எஸ்.இசக்கிமுத்து அவர்களிடத்தில் ஒப்படைக்கவும் அதற்கான கூலியாக வருவாய் மூலதன நிதி கணக்கிற்கு ரூ.20,000/–மும் குடிநீர் மற்றும் வடிகால் நிதி கணக்கிற்கு ரூ.20,000/–மும் சேர்த்து ரூ.40,000/– வழங்கலாம்.

மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1517/2015/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1786</u>

அனுமதிக்கப்படுகிறது.

9)இந்நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை (ம) பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து மேல் நிலைநீர்தேக்க தொட்டிகளில் அமைந்துள்ள படிக்கட்டுகள் ( ) முற்றிலும் சேதமடைந்த நிலையில் உள்ளது. இதனால் இதர காலங்களிலும் மழை காலங்களிலும் குடிநீர் தொட்டியில் அமைந்துள்ள படிக்கட்டுகள் மீது ஏறிச் சென்று குடிநீரின் அளவை காண முடியாத நிலை உருவாகிறது. எனவே மேற்கண்ட அனைத்து மேல் நிலை நீர்த் தேக்க தொட்டிகளில் அமைந்துள்ள படிக்கட்டுகளை சீர் செய்யவும், இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ளவும் செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 498/2021/இ1)

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றத் தீர்மானம் எண்.1787

அனுமதிக்கப்படுகிறது.

10) தமிழ்நாடு நகரீயல் பயிற்சி நிறுவனம் கோயம்பத்தூருக்கு 2020-2021 ஆண்டிற்கு செலுத்த வேண்டிய நகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) -ஐ செலுத்துமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி

அவர்களின் கடிதம் ந.க.எண். 158/2016/ஆ2, நாள் 19/04/2021 மூலம் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எனவே 2020-2021-ம் ஆண்டுக்கான பங்களிப்புத் தொகை ரூ.20,000/-னை வழங்கவும், அவசர அவசியம் கருதி வழங்கியதற்கும் மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1988/2017/சி1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1788</u>
அனுமதிக்கப்படுகிறது.

11)தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ல் பிரிவு 306 உட்பிரிவு 5(2) மற்றும் உட்பிரிவு 6(1920) தமிழ்நாடு சட்டம் 5ல்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகளின் படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம் ) சட்டம் -1930(1930- ம் தமிழ்நாடு சட்டம் 10)ன் படியும் இந்நகராட்சிக்குள் சட்டப் படி0யான வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் உள்ள கட்டிடங்களில் கழிவறைகள் மற்றும் நச்சுத் தொட்டிகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் இவற்றிலிருந்து பெறப்படும் கசடு கழிவுகளை சேகரித்தல் , இடம் பெயர்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக கசடு கழிவு மேலாண்மை () வரைவு உபவிதிகளுக்கு உய நிபந்தனைகளுடன் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் (முழு கூடுதல் பொறுப்பு) சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி பொது அங்கீகாரம் ( ) வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரைவு உபவிதிகளுக்கு பொது அங்கீகாரம் வழங்கப்பட்டதன்படி பொது மக்களுக்கு தகுந்த கால அவகாசம் கொடுத்து தகவல் தெரியப்படுத்திட வேண்டி மாவட்ட அளவில் ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் 01/06/2021 முதல் 30/06/2021 வரைக்குள் ஒரு சிறிய பக்க அளவில் பிரசுரம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 120/2019/இ1)

அ.கு :- மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

<u>மன்றத் தீர்மானம் எண்.1789</u>
அனுமதிக்கப்படுகிறது.

12)சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020-2021-ன் கீழ் பத்மனாபபுரம் நகராட்சி கல்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் அனைத்து வகுப்பறைகளுக்கும் ஒலி பெருக்கி வசதிகளுடன் அமைத்தல் பணிக்கு கூடுதல் ஆட்சியர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் கடிதக் குறிப்பு எண். ஆ3/1706/2020, நாள் 03/02/2021-ன் படி பரிந்துரை செய்யப்பட்டு மதிப்பீடு (ம) இட ஆய்வு சான்று தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி மேற்கண்ட பணிக்கு மதிப்பீடு தயார் செய்ய விலை நிரக்கு பட்டியலில் (Schedule of Rate) விலை நிர்ணயம் செய்யப்படாததால் 04/02/2021 அன்று உள்ளூர் (ம) வெளியூர் நிறுவனதாரர்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற

விலைப்புள்ளிகளின் அடிப்படையில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது.

மேற்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின்படி குறைவான விலைவிகிதத்தில் கொடுத்துள்ள /. . என்ற நிறுவனத்தாரரின் விலைவிகிதத்தின் அடிப்படையில் அமைக்கும் பணிக்கு ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளியில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 11/2021/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1790</u>
அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/-

தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)
பத்மனாபபுரம் நகராட்சி.